# பெந்தோட்ட பிரதேச சபை

## காலி மாவட்டம்

## 01. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 05 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் அடங்கியுள்ள எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்களின் காரணமாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பெந்தோட்ட பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்க முடியாதுள்ளேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

(அ) சபையினால் கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக் கூற்றுக்களுடன் காசுப் பாய்ச்சல் கூற்றொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) சபைக்குச் சொந்தமான மோட்டார் வாகனத்தின் பெறுமதி ரூபா 650,000 கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 36,000 இற்கான தொங்கல் கணக்கின் வரவு மீதியினை இனங்கண்டு கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 18,040 இற்கான மீண்டுவரும் செலவுகள் நிதிக் கூற்றுக்களில் மூலதனச் செலவுகளின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் போது செலவுத் தலைப்புகளின் கீழ் கொள்வனவு செய்திருந்த பண்டங்களில் மீதிப் பண்டங்களின் பெறுமதி ரூபா 115,131 இனை நாட்குறிப்பு 52 மூலம் பொதுக் களஞ்சியக் கணக்கிற்கு ரூபா 151,131 என செலவு வைக்கப்பட்டு, மூலதனச் செலவுக் கணக்கிற்கு ரூபா 151,131 என செலவு வைக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவுகள் ரூபா 36,000 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 78,156,783 இற்கான 27 வரவு மீதிகள் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பரீட்சை மீதியில் செலவு மீதிகள் எனவும், 18 செலவு மீதிகள் பரீட்சை மீதியில் வரவு மீதிகள் எனவும் காட்டப்பட்டிருந்தன. அதே போல் பரீட்சை மீதி கணக்கு பதிவு அலுவலர், செயலாளர் மற்றும் தலைவரினால் கையொப்பமிடப்பட்டு சான்றுபடுத்தப்பட்டிருந்தது.

1.3.3 தீர்க்கப்படாத கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 245,861 இற்கான முற்கொடுப்பனவு மீதியில் 03 வருடங்கள் முதல் 17 வருடங்கள் வரையான காலப்பகுதியில் தீர்க்கப்படாமல், முன்கொண்டுவரப்படும் ரூபா 108,500 இற்கான மீதிகளும் காணப்பட்டன. அம் மீதிகளைத் தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பெந்தோட்ட தலைமை அலுவலக ஆயுள்வேத கையிருப்பில் 4 வகையான மருந்துகள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதி ரூபா 14,323 ஆக காணப்பட்டதுடன் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதி ரூபா 50,531 என காணப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 36,208 ஆகும்.

1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 03 வருட காலத்தை விஞ்சியுள்ள செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,197,587 ஆகும். அம் மீதியில் 10 வருடங்களை விட மிகைத்த ரூபா 721,312 மீதியொன்றும் காணப்பட்டது.

1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

(அ) தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 34,987,574 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2010 திசெம்பர் 31 திகதி வரை வழங்கப்பட்டு 06 வருடங்களை விஞ்சிய 08 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அளித்திருக்கவில்லை. அத்துடன் அவ் ஐய வினாக்களுகடன் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 427,425 ஆகும்.

1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) | விதி இலக்கம் 193 | பாதீட்டுடன் செலவு விடயங்களை ஒப்பிட்டு மிகைகள் மற்றும் பற்றாக் குறைகளுக்கான காரணங்களை காட்டும் கூற்றொன்று ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காக சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ii) | விதி இலக்கம் 194 | தளபாடங்கள் உட்பட சபையின் அனைத்து ஆதனங்களும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்திருக்கவில்லை. |
| (iii) | விதி இலக்கம் 218 | சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஆண்டிற்கு ஒரு முறை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அறிவித்திருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் (நி.பி.) | |
| | நி.பி. 756 மற்றும் 757 | மீளாய்வாண்டிற்காக வருடாந்த உருப்படி சரிபார்த்தல் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 02. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது பிரதேச சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 116,759 ஆக இருந்ததுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,669,891 ஆக காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பீடு | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை | மதிப்பீடு | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
| | ரூபா ‘000 | ரூபா‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| வீதி வரி மற்றும் வரி | 3,911 | 3,048 | 2,413 | 3,825 | 3,367 | 1,753 |
| வாடகை | 2,492 | 2,487 | 43 | 2,201 | 3,360 | 40 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 643 | 622 | 128 | 618 | 593 | 129 |
| ஏனைய வருமானங்கள் | 23,129 | 24,348 | 9,127 | 24,047 | 19,306 | 10,012 |

2.2.2 நிலுவை வருமானம் அறவீடு செய்தல்

மீளாய்யவாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 15,763,141 இற்கான நிலுவை வருமானம், 1987 இன் 15 இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவுகள் 158 மற்றும் 159 இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் 02 நீதிவான் நீதிமன்றங்களில் இருந்து 2010 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட்டு, மாகாண வருமான ஆணையாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 267,400 தொகைக்கான தண்டப் பணம் சபைக்குக் கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.4 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 7,780,388 இற்காக முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவுகள் உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவு விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| மீண்டுவரும் செலவுகள் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் |
| | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 |
| ஆளுக்குரிய வேதனம் | 17,006 | 16,520 | 486 | 16,593 | 15,920 | 673 |
| ஏனையவை | 10,961 | 14,337 | (3,376) | 11,255 | 11,208 | 47 |
| உப கூட்டுத் தொகை | 27,967 | 30,857 | (2,890) | 27,848 | 27,128 | 720 |
| மூலதன செலவுகள் | 4,512 | 7,422 | (2,910) | 4,841 | 6,925 | (2,084) |
| மொத்தக் கூட்டுத் தொகை | 32,479 | 38,279 | (5,800) | 32,689 | 34,053 | (1,364) |

2.4 மனித வள முகாமைத்துவம்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஊழியர் தரம் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| பதவி நிலைத் தரம் | 03 | 01 |
| இரண்டாரம் தரம் | 19 | 20 |
| ஆரம்ப தரம் | 27 | 19 |
| ஏனையவை(அமைய, தற்காலிக) | - | 39 |

2006 ஏப்ரல் 10 திகதிய இலக்கம் 28 கொண்ட முகாமைத்துச் சேவை சுற்று நிருபத்தின் பிரகாரம் நிரந்தர/ தற்காலிக/ அமைய/ பிரதியீட்டு/ ஒப்பந்த அல்லது ஏனைய ஏதேனும் அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படின் அதற்காக முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் பூர்வாங்க அங்கீகாரத்தை பெற வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ள போதும், அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாமல் சபையினால் இரண்டாம் தர ஒரு அலுவலர் மற்றும் பிரதியீட்டு, அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் 39 பேர் சேர்க்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

------------------------------------------------

2.5.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டு பௌதீக வளங்கள்

------------------------------------------------------------------------------------------------------

(அ) கனடா அரசாங்கத்தினால் 2007 மார்ச் 19 திகதி சபையின் சேதனப் பசளை செயற்திட்டத்திற்காக நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 196,150 பெறுமதியான கழிவுப் பொருட்களை சிறு துண்டுகளாக்கும் இயந்திரம், கை டிரக்டர் மற்றும் சேதனப் பசளை அரிக்கும் இயந்திரம் என்பன குறிப்பிட்ட செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாமையால் கணக்காய்வுத் திகதியாகிய 2011 ஜுன் 08 திகதி வரை பயன்படுத்தப்படாமல் செயற்படாது காணப்பட்டது.

(ஆ) மேலும் சபைக்கு சொந்தமான ரூபா 2,458,385 பெறுதியான 03 கட்டிடங்கள் மற்றும் டிரக்டர் வண்டி ஒன்று 02 வருடங்கள் முதல் 06 வருடங்கள் வரையான காலப்பகுதியில் செயற்படாமல் காணப்பட்டது.

2.5.2 அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

-----------------------------------------------------------------

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,104,745 ஆக காணப்பட்டதுடன், 01 வருட காலத்தை விஞ்சிய அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 72,075 ஆகும்.

2.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

----------------------------------------------

பெந்தோட்ட, இந்துரவ மற்றும் பஹலகம்ஹய நூலகங்களின் ரூபா 14,999 பெறுமதியான 1415 புத்தகங்கள் குறைவாகக் காணப்பட்து. அதே போல் இந்துரவ நூல் நிலையத்தில் இருந்து 2005 ஆண்டிற்கு முன்னர் வெளியே கொண்டு செல்லப்பட்ட ரூபா 10,376 பெறுமதயியான 107 நூலகப் புத்தகங்கள் கணக்காய்வுத் திகதி வரை திருப்பி ஒப்படைத்திருக்கவில்லை.

2.7 செயற்பாட்டுத் திறமையின்மை

-----------------------------------------------

(அ) 1988 இன் 74 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 01 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தும் அதிகாரச் சட்டத்தின் தேவையின் பிரகாரம் சபையின் அங்கத்தவர் எவரும் 2010 ஆண்டிற்கான சொத்துகள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தும் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஆ) சபை ஊழியர் ஒருவருக்கு அரச வங்கி ஒன்றிலிருந்து வழங்கியிருந்த ஆதனக் கடனுக்காக 2007 ஏப்ரல் மாதம் முதல் 2010 திசெம்பர் வரை அரசாங்க வட்டிப் பங்களிப்பு என சபை நிதியத்தில் இருந்து செலுத்தியிருந்த ரூபா 234,176 தொகையினை உள்ளுரட்சி திணைக்களத்தில் இருந்து மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.8 ஒப்பந்த நிருவாகம்

---

(அ) கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

---

பெந்தொட்ட கடைத்தொகுதி நிர்மாணித்தல் மற்றும் கோனகல கடைத்தொகுதி மற்றும் மரக்கறி விற்பனை கொட்டில் நிர்மாணித்தல்

---

பெந்தோட்டை கடைத்தொகுதி நிர்மாணித்தல், கோனகல கடைத்தொகுதி மற்றும் மரக்கறி விற்பனை கொட்டில் நிர்மாணித்தல் வேலைகளுக்காக முறையே ரூபா 37,838,424 தொகை மற்றும் ரூபா 30,704,105 தொகைக்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, 2009 ஏப்ரல் 21 திகதி சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. உசாத்துணை சேவைகளுக்காக கூறுவிலைகள் கோருவதற்கு செய்தித் தாள்களில் அறிவித்தல் பிரசுரிப்பதற்காக ரூபா 19,868 தொகையும், பெந்தோட்டை பொது சந்தை காணி கொள்வனவுக்காக வட்டித் தொகையாக ரூபா 43,711 வும் சபை நிதியத்தில் இருந்து செலுத்தியிருந்த போதும் கணக்காய்வுத் திகதியாகிய 2011 ஜூன் 08 திகதி வரை இரண்டு வேலைகளும் கைவிடப்பட்டிருந்தன.

(ஆ) நேர்கூலி அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகள்

---

செரண்டிப் தரிப்பிட பாதையின் மீதிப் பகுதியில் கொங்கிரீட் பண்ணல்

---

இந்த நிர்மாண வேலையின் வேலை விடயம் 02 இன் கீழ் 1: 2: 4( ¾ ) கலவையில் 4'' கனத்தில் கொங்கிரீட் பண்ணுவதற்காக 05 கியூப்களுக்காக தேவையான சீமெந்து, கற்கள், மணல் போன்ற பொருட்களுக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் தொழில்நுட்ப அலுவலரின் இறுதி வேலை அறிக்கையின் பிரகாரம் மதிப்பிடப்பட்டிருந்த பொருட்களின் அளவுகளையே குறிப்பிட்ட வேலைக்காக பயன்படுத்தப்பட்டிருந்தன என சான்றுபடுத்தியிருந்தார். எனினும் நிர்மாண வேலை தொடர்பாக 2011 ஜூன் 01 திகதி மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் போது பெற்றுக்கொண்டிருந்த அளவைகளின் பிரகாரம் போடப்பட்டிருந்த கொங்கிரீட்டின் அளவு 3.73 கியூப்களாகும். இதன் பிரகாரம் நிர்மாண வேலைகளுக்காக 23 சீமெந்து பைகள், ¾" கற்கள் 1¼ கியூப் மற்றும் ¾ கியூப் மணல் என்பன மிகையாக வழங்கப்பட்டிருந்தது. அவற்றின் கிரயம் ரூபா 30,142 ஆகும்.

(இ) இந்துரவ உப அலுவலக வளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த முன்பள்ளிக் கட்டிடம்

---

சபைக்குச் சொந்தமான இந்துரவ உப அலுவலக வளவில் அரச நிறுவனம் அல்லாத அமைப்பொன்றினால் மொத்த கிரயம் 5.7 மில்லியனுக்காக மதிப்பீட்டின் மீது முன்பள்ளிக் கட்டிடம் 2006 ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும், அதற்காக சபையினால் கட்டிட வரைபு ஒன்று அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அதே போல் நிர்மாணித்தல் தொடர்பான கோவையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2011 ஜூன் 07 திகதி மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை எனவும் கட்டிடத்தின் மீதியான வேலைகள் பூர்த்தி செய்து சொத்துக்களை பாதுகாப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு சபை இது வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

2.9 அகக் கணக்காய்வு

சபையில் போதியளவு அகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

03. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிருவாகம்

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஊ) ஒப்பந்த நிருவாகம்